# மேற்கே செல்லும் விமானம் 3

மோகன் கிருட்டிணமூர்த்தி



பாகம் மூன்று

Copyright (c) 2015 Mohan Krishnamurthy. All rights reserved.

No part of this book can be copied, distributed, reproduced or transmitted in any form or means including photocopying, mechanical, electronic, recording or otherwise without the prior written permission from the author. This book is licensed only for your personal use, not meant to be resold.

Originally written in August 2006. Published in 2015 for eBooks publishing platforms. Please contact at leomohan@yahoo.com for feedback and review.

Cover page image courtesy: http://www.pixabay.com bound by Creative commons Deed CC0. Thanks to the original artist.

# 1

ஒருவேளை அவன் தற்கொலை செய்துக் கொண்டால்? இந்த நினைப்பு அவளை வாட்டியது. அதை அவளால் ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை.

ஓடிச் சென்று முரளி ப்ரவீணாவை கட்டியணைத்தாள். மிக்க நன்றி என்று சொல்லிவிட்டு அமைதியாக வண்டியில் ஏறி அமர்ந்தாள்.

குறிப்பு
கதை ப்ரவீணாவும் முரளியும் சிலியாவை அமெரிக்காவில் சந்தித்துவிட்டு வந்த பிறகு தொடர்கிறது. ஆக நீங்கள் இரண்டாம் பாகம் படித்ததையே மறந்துவிட்டு படியுங்கள். தொடர்சிக்காக கடைசி இரண்டு பத்திகளை கொடுத்திருக்கிறேன்.

---

"நமக்கு ஒரு புதிய ப்ராஜெக்ட் கிடைத்திருக்கிறது. நமக்கு சில .நெட் டெவலெப்பர்ஸ் தேவைப்படுது. நீங்கள் சென்னை சென்று நேர்முகத் தேர்வை நடத்தி சில பேரை தேர்ந்தெடுத்து வரவேண்டும்" என்று ராஜின் மேலாளர் சொன்னார் ஒரு நாள்.

ஆஹா நல்ல வாய்ப்பு. அம்மா அப்பாவைப் பார்த்துவிட்டு அம்மனையும் பார்த்துவிட்டு வரலாம். "சரி" என்றான்.

சென்னை வந்திறங்கியதும் முரளியுடன் பேசினான். அவன் தவிர்க்க நினைத்த கேள்வி வந்தது.

"சிலியா உன்னோடு பேசினாளா?"

"இல்லைடா".

"என்ன? என்ன அழுத்தக்கார பொண்ணா இருக்காடா இவள்? இந்த நூற்றாண்டில் இப்படி ஒரு பெண்ணா? "

"விடுடா. எனக்கு மூன்று நாள் இண்டிர்வ்யூ இங்கே. முன்னாலே விளம்பரம் கொடுத்துட்டோம். வெள்ளக்கிழமை ராத்திரி ஊருக்கு போறேன். நீயும் வரியா?"

"வர்றேன்டா. நாம கிருஷ்ணன் ராஜூ எல்லாம் சேர்ந்து போவோம்! "

"சரி" என்றான்.

பல பேர் வந்திருந்தனர். அனைவரிடமும் தொடர்ந்து பேசியதில் களைப்பாக இருந்தான். கடைசியில் மாலினி.

மாலினி. 10வது 12வது மாநிலத்திலேயே முதல் மதிப்பெண். பிஎஸ்ஸி கம்ப்யூட்டர். எம் சி யே. அனைத்திலும் தங்கப்பதக்கம்.

"எந்த கம்பெனியில் நீங்கள் பணிபுரிகிறீர்கள்?"

"நான் ஹூய்க்ஸில் வேலை செஞ்சேன். இப்ப விட்டுட்டேன். வேலை தேடிக்கிட்டு இருக்கேன்".

"ஏன் வேலையை விட்டீங்க?"

"நான் இன்னும் சாலேன்ஜிங் ப்ராஜெக்ட்ஸ் பண்ணனும் நினைக்கிறேன் சார். இங்கே அத்தனை வாய்ப்பு இல்லை".

"வேலை கொடுத்தால் எப்போது வர இயலும்?"

"உடனடியாக சார்".

"எங்கள் வேலை மிகவும் அவசரமாக இருப்பதால் முதலில் உங்களை பி1 விசாவில் தான் அழைத்து செல்ல முடியும். சரியா?"

"பரவாயில்லை சார்".

"சரி ஒரு மெனு டிரவன் ப்ரோகிராமில் ஆப்செஜக்ட்ஸ் எப்படி ரீயூஸ் பண்ணுவீங்கன்னு ஒரு உதாரணம் செய்து காட்ட முடியுமா?"

"தாராளமா சார்".

"நீங்க சார் சொல்லும் பழக்கத்தை விடுங்க. என்னை ராஜகோபால் ராஜ் இல்லை கோபால் இப்படி கூப்பிடலாம்".

"சரி சார்".

தன்னுடைய லாப்டாப்பில் மைக்ரோஸாஃப்ட் விஷூவல் .நெட் ப்ரோகிரமை இயக்கி அவள் பக்கம் திருப்பினான். அவள் எழுத தொடங்கவே அவளை அளக்கத் தொடங்கினான்.

எளிமையாக இருந்தாள். ஏழை குடும்பமாக இருக்கலாம். கண்கள் சுறுசுறுப்பாக லாப்டாப்பை பார்த்துக் கொண்டிருந்தது. அவளுடைய மென்மையான கைகள் வேகமாக ஏதோ தட்டிக் கொண்டிருந்தன. ஒரு கையில் மட்டும் வளையல். தன்னைப் போலவே வலது கையில் கடிகாரம் அணிந்திருப்பதை கண்டான். வெள்ளைநிற சுடிதாரில் பளிச் சென்று இருந்தாள். கழுத்தில் ஒரு மெல்லிய செயின். நெற்றியில் சிறிய விபூதி பட்டை. தமிழ் பெண்மணி!"

உதடுகளை அடிக்கடி ஈரப்படுத்திக் கொண்டிருந்தாள். பதட்டத்தில் இருக்கிறாள் போலும். சிறிய உதடுகள். சிவந்திருந்தன இயற்கையாக. அவளிடம் மெல்லிய வியர்வை வாடை. பஸ் பயணம் போலும். இன்றைய பெண்மணிகள் சந்திக்கும் ஒரு தினசரி போர். பஸ் பயணம்.

லாப்டாப்பை அவன் பக்கம் திருப்பி "ஆச்சு சார்" என்றாள்.

"மாலினி, நான் சொல்றதை நல்லா கேட்டுக்கங்க. நான் இப்ப இந்த ப்ரோகிராமை கம்பைல் பண்ணப்போறேன். ஒரு எர்ரர் இருந்தாலும் உங்களுக்கு வேலை கிடைக்காது. சரியா?"

"கட்டாயமா சார். நான் கொஞ்சம் மெதுவாக தான் வேலை செய்வேன். ஆனா என் ப்ரோகிராமில் எந்த எர்ரரும் வர வாய்பே இல்லை".

அவளுடைய தைரியம் மன உறுதி தன்னம்பிக்கை அவனை ஈர்த்தது.

அவனுக்கு மெதுவாகவும் அதே சமயத்தில் சரியாகவும் வேலை செய்பவர்களே வேண்டும். இதற்கு முன் வேலைக்கு எடுத்த சிலர் கார் ரேஸ் போல வேலை செய்துவிட்டு நான்கு நாட்கள் அமர்ந்து தவறை சரி செய்ய தலையை பிய்த்துக் கொள்வார்கள்.

அவன் மெதுவாக எஃப் 5 பட்டனைத் தட்டினான். 0 எர்ரர்ஸ் சக்சஸ்ஃபுல்லி கம்பைல்ட் என்று வந்தது.

"யூ காட் யூவர் ஜாப் யங்க் லேடி" என்று கைகுலக்கினான். "மற்ற விபரம் இந்த கவரில் இருக்கிறது. உங்களுக்கு பி1 விசாவுக்கான ஏற்பாடுகள் செய்றோம். முதல் விமானத்தில் ஊர் வந்து சேருங்கள். உங்களுக்கு சேரவிருப்பமில்லை என்றால் இது என்னுடைய அமெரிக்கா ரோமிங் மொபைல். மாலைக்குள் உங்கள் முடிவை சொல்லுங்க. நான் சாயங்காலம் என்னுடைய சொந்த விஷயமாக விழுப்புரம் போகவேண்டியிருக்கும்".

"மிகவும் நன்றி சார். விழுப்புரமா? என் மாமா அங்குதான் மின்சாரத்துறையில் வேலை செய்கிறார். விழுப்புரத்தில் எங்கே?"

"பாரதி நகர். பாண்டி ரோடு".

"ஓ. என் மாமாவும் அங்குதான் இருக்கிறார்".

"அப்படியா? அவர் பெயர் என்ன?"

"சிவகுமார்".

"வாட் அ ஸ்மால் வேர்ல்ட். அவர் என் வீட்டின் மூன்றாவது வீட்டில் தான் இருக்கிறார். சரி மாலினி. மீண்டும் வாழ்த்துகள். பை" என்று சொல்லி விடைப் பெற்றான்.

# 2

ஊர் செல்லும் வழியில் அனைத்தையும் பேசி தீர்த்தனர் நண்பர்கள் நால்வரும். ராஜூ எல்லா திரைப்படப்பாடல்களையும் குழப்பி புதிய பாடல்கள் எழுதுவான். அவனை மீண்டும் அதை பாடி காட்டச் சொல்லி மகிழ்ந்தனர்.

முரளி ப்ரவீணாவிற்காக எழுதிய கவிதைகளை மனப்பாடமாக எடுத்துவிட்டான்.

பாலா கொரியர் கம்பெனியில் கலக்குகிறான் என்றும் அவன் அண்ணன் ஓட்டல் பிசினஸில் கலக்குகிறான் என்றும் சொன்னார்கள். பாலாவுக்கு சமீபத்தியில் திருமணம் நடந்தது. அனைத்து நண்பர்களும் சேர்ந்திருந்தனர் - இவனைத் தவிர.

வெளிநாட்டில் வேலை செய்வதால் கிடைக்கும் லாபத்தை விட நஷ்டங்களே அதிகம். வருடம் முழுக்க வரும் பண்டிகைகள் இழக்க வேண்டியிருக்கிறது. கோவில் குளம். பழகிய நண்பர்கள். தந்தை தாய். தொலைபேசியில் ஆயிரம் செலவு. வருடம் ஒரு முறை வரும் போது சேமித்து வைத்த எல்லா காசையும் போட்டு ஊருக்கெல்லாம் ஏதாவது வாங்கி வரவேண்டியது.

முரளி முதலிலேயே சொல்லிவிட்டான். யாரும் சிலியா பற்றி பேசக் கூடாது என்று. அதனால் யாரும் அதைப் பற்றி மூச்சு விடவில்லை. இன்னும் கேட்டால் மூன்று மணி நேரம் அனைவரும் 10 வருடத்திற்கு முன் நடந்த பேச்சைத்தான் பேசிக் கொண்டிருந்தனர்.

திடீரென்று ராஜூ "உன் ஆளு" என்று ஏதோ சொல்ல முரளி "வேணாம்டா" என்றான்.

"டேய் இருடா. நான் அபிதகுஜாம்பாள் பத்தி பேசறேன்".

"ஆஹா" என்று அனைவரும் சிரித்தனர்.

"யாருடா அது" என்றான் ராஜ் ஏதோ நினைவாக.

"டேய் இந்துமதி-டா. ஞாபகம் இருக்கா இந்தி க்ளாஸில் அவளுக்கு யாரோ லவ் லெட்டர் கொடுத்திட்டு நான் ஐந்து எழுத்து பேர் கொண்டவன் என்று எழுதி நம்மையெல்லாம் டீச்சர் போட்டு விசாரித்தாரே" என்றான்.

"ஹா ஆமாம். ரா ஜ கோ பா ல் நான் தான் ஐந்து எழுத்து அப்படின்னு என்னை புடிச்சி உலுக்கினாங்க. நான் கி ரு ஷ் ண ன் - தான் ஐந்து எழுத்துன்னு சொல்லி இவனை மாட்டி விட்டேன்" என்றான் ராஜ்.

"ஹா ஹா" என்று அனைவரும் சிரித்தனர்.

"டேய் என்னை வேற யாரோட சேர்த்து பேசினாலும் பரவாயில்லை. அந்த இந்துமதி. சரியான அழு மூஞ்சி. அந்த பிரச்சனையிலிருந்து வர்றதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிடுத்து".

இவ்வாறாக நினைவுகளை அசைப் போட்டுக் கொண்டே அவர்கள் ஊர் வந்து சேர்ந்தனர். அவன் அம்மாவுக்கு தலை கால் புரியவில்லை. "என்னடா ஒரு போன் கூட போடாமல் வந்திட்டே".

அவன் அப்பாவிற்கு மகிழ்ச்சி அளவில்லாமல். ஓடிச் சென்று சேட்டுக் கடையிலிருந்து அவனுக்கு பிடித்த திண்பண்டங்கள் வாங்கி வந்தார்.

நண்பர்கள் அனைவரும் விழுப்புரத்தை ஒரு அங்குலம் விடாமல் சுற்றித் தீர்த்தனர்.

அம்மனை தரிசிக்க சென்றவன் ஒன்றுமே கேட்காமல் திரும்பி வந்தான். ஒரு

நூறு ரூபாய் நோட்டை உண்டியலில் போட்டான்.

அவன் 1500 சம்பாதிக்கும்போதும் 100 தான் 3 லட்சம் சம்பாதிக்கும் போதும் 100 தான். அம்மனை காசால் ஏமாற்ற முடியுமா? இல்லை தன் செல்வத்தை அவளிடம் தான் காட்ட முடியுமா? உலகத்திற்கு செல்வத்தையும் செழிப்பையும் தருபவள் அவள்.

அவள் என்ன காசில்லாமலா இந்த சிறிய கோவிலில் வந்து அமர்ந்திருக்கிறாள்? பணம் இருக்கும் இடத்தில் பக்தி இருப்பதில்லை. பணம் மனதை விரிவடையச் செய்வதில்லை. அவள் இந்த ஏழைகளின் மத்தியில் ஆனந்தமாக இருந்தாள்.

அவளுக்கு அவர்கள் வேண்டும். அவர்களுக்கு அவள் வேண்டும். சிறப்பு வரிசை 1500 தரிசனம் 1000 கிட்டே நின்று பூஜை செய்ய 10000 என்று பக்தியை யாரும் ஏலம் போடுவதில்லை. இங்கு வருபவர்கள் பாம்பு புற்றில் பாலை ஊற்றி விட்டு 50 பைசா சூடம் ஏற்றி அவள் காலில் சரணடைகிறார்கள். இந்த ஏழைகளை அவள் தன் அன்பால் அணைக்கிறாள். அதனாலே அவர்கள் சுபிட்சம் அடைகிறார்கள். இது அவனுக்குத் தெரியும். அவன் அன்று சாதாரணமானவன். இன்றும் அவன் அம்மாவின் முன்பு சாதாரணமானவன் தான். அவனிடம் ஒன்றும் மாற்றம் இல்லை. அவன் அவள் மேல் வைத்திருந்த அன்பிலும் ஒரு மாற்றமும் இல்லை.

எல்லாம் அறிந்த அந்த தாய் அதனையும் அறிந்திருந்தாள். தன் பிள்ளை ஒன்றுமே கேட்காமல் செல்வதை நினைத்து புன்னகைத்தாள்.

# 3

அனைவரிடமும் விடைப் பெற்றுக் கொண்டு விமானதள நுழைவாயில் பாதுகாவலிரிடம் தன் பயணச்சீட்டைக் காட்டிவிட்டு உள்ளே நுழைந்து தன் பைகளை பாதுகாப்பு சோதனை எந்திரத்தில் போட்டு எடுத்து நீளமான வரிசையில் போர்டிங் கார்ட் பெற நின்றிருந்தான். 10 நாள் விழுப்புர வாசம் பாமரனாய் சென்ற அவனை பண்டிதனாக மாற்றியிருந்தது. உடலில் ஒரு புதிய தெம்பு.

அவன் அம்மா-அப்பா, சிலியா பேச்சை எடுத்ததும் அதிக ஆர்வமில்லாதவன் போல் காட்டிக் கொண்டான். அவர்களும் அப்பாவியாக இன்னும் அவளை பார்க்கவில்லை போலும் என்று நினைத்துக் கொண்டார்கள்.

"ஹேய் மாலினி நீங்களும் இந்த விமானத்தில் தான் வருகிறீர்களா?"

"ஆமாம் சார்". அவளுக்கு தன் மேலாளருடன் பயணிக்கின்றோமே என்று ஒரு பயம். ஆனால் முதன் முறையாக விமானப்பயணம். முதல் பயணமே மேல்நாடுப் பயணம். 18 மணி நேர பயணம். இதில் துபாயில் வேறு விமானம் மாற்ற வேண்டும். இதெல்லாம் அவள் வயிற்றில் புளியை கரைத்துக் கொண்டிருந்தது. தெரிந்தவர் (எவ்வளவு தெரிந்தவர்) கூட வருவது ஆறுதலாக இருந்தது.

"நல்லதா போச்சு. எனக்கு விமானப் பயணத்தில் தூங்கி பழக்கம் இல்லை. எப்படிடா 18 மணி நேரம் கழிக்கப் போகிறோம் என்று நினைத்தேன். உங்க டிக்கெட் கொடுங்க அடுத்தடுத்த சீட் கேட்கலாம்".

அவளும் மகிழ்ச்சியடன் டிக்கெட் எடுத்துக் கொடுத்தாள்.

போர்டிங் பாஸ் வாங்கிக் கொண்டு சுங்க சோதனையை கடந்து வரி விலக்கு கடை அருகில் வந்தனர்.

"சார், ஒரு நிமிடம் ஒரு புத்தகம் வாங்கிட்டு வந்திடறேன்" என்றாள். மாலினி.

"ஏய் நில்லுங்க நானும் வர்றேன்".

இருவரும் ஒரு 20 நிமிடம் கழித்தப் பிறகு வெளியே வந்தனர். அவன் ரோரி ஸ்டுவர்ட் எழுதிய தி ப்ளேசஸ் இன் பிட்வீன் என்ற புத்தகம் வாங்கியிருந்தான்.

அவளோ டிராவெல் டு அமெரிக்கா என்ற புத்தகத்தை வாங்கியிருந்தாள்.

"ஹேய், இந்த புத்தகம் வேஸ்ட். நான் முதல்ல அமெரிக்கா போகும் போது இது தான் வாங்கினேன். அதுல சொல்லியிருக்கிற மாதிரி ஒரு விஷயம் கூட அமெரிக்காவில் இல்லை" என்றான்.

அவள் மன்னிப்பு பார்வை ஒன்று பார்த்தாள். அவள் இந்த புத்தகத்தை முன்பே வாங்க முடிவு செய்திருந்தாள். ஆனால் தன்னுடன் ஒரு அனுபவசாலி வருவதை மறந்து அவனை கேட்காமல்
வாங்கிவிட்டோமே என்று வருந்தினாள்.

இருவரும் விமானத்திற்குள் சென்று இருக்கை தேடி அமர்ந்தனர்.

"சார், இந்த பெல்ட் போடவரலை" என்றாள் சங்கடமாக.

அவன் அவள் பக்கம் குனிந்து அதை சரி செய்தான். ஆக்ஸ் எஃபெக்ட் தன் முதல் பலி வாங்கிவிட்டது.

"உங்களுக்கு சினிமா பாட்டெல்லாம் பிடிக்குமா?"

"என்ன சார் இப்படி கேட்டுட்டீங்க. வாலி வைரமுத்து கண்ணதாசன் பாட்டெல்லாம் எனக்கு அத்துப்படி".

"அப்படியா பரவாயில்லையே".

"உங்களுக்கு யாரைப் பிடிக்கும்".

"எனக்கு வைரமுத்து. கண்ணதாசனைவிட சட்டுல் செக்ஸ் வரிகளை வைரமுத்து நன்றாக கையாள்வார்".

"ஓ. எனக்கும் வைரமுத்து தான். திருடா திருடா தான் அவருக்கு கம் பேக். நீங்க ராசாத்தி என்னுசுரு என்னுதில்லை கேட்டதுண்டா?"

"இல்லாமலா? காரவீட்டுத் திண்ணையில கறிக்கு மஞ்சள் அரைக்கயிலே மஞ்சள அரைக்கும் முன்னே மனசை அரைச்சவளே! வாட் அன் இமாஜினேஷன். வைரமுத்து அட் ஹிஸ் பெஸ்ட்".

"அப்புறம் அந்த தாஜ் மஹால்ல ஒரு பாட்டு. ஆ".

"நீயிங்கே நீயிங்கே பூச்சுடும் வாளெங்கே தாலி கட்ட கழுத்து அரிக்குதே இந்த சிறுக்கி மக உசிர உருக்கிக் குடிக்க அந்த முரட்டுப் பயலும் வருவானா?"

"அந்த வரி - தாலி கட்ட கழுத்து அரிக்குதே. சான்ஸே இல்லை சார். வைரமுத்து வைரமுத்துதான்".

"வாவ். நீங்க அமேஸிங்க. எல்லா வரிகளையும் சொல்றீங்க. எனக்கு நல்லா பொழுது போகும் அமெரிக்காவில" என்றான் ராஜ். சிலியாவுக்கு வைரமுத்துவைப் பற்றி என்ன தெரியும். சிலியா லேண்டாகி விட்டிருந்தாள். மாலினி டேக் காஃப்.

"உங்களுக்கு நடிகர்கள்ல யாரைப் பிடிக்கும் சார்?" - மாலினி.

"மாலினி என்னை சார்ன்னு சொல்லறதை நிறுத்துங்க முதல்ல".

"சரி. சரி. கோபால்". 'ராஜ்' என்று சொன்னால் ரொம்ப நெருக்கம் போல் இருக்குமோ என்று நினைத்து கோபால் என்று சொன்னாள்.

"ஹா. கோபால். யாரும் என்னை இதுவரை இப்படி அழைத்ததில்லை" என்று நினைத்துக் கொண்டான்.

"எனக்கு மோகன் சிவகுமார் முரளி சுரஷ்-நதியா கார்த்திக் படங்கள் ரொம்ப பிடிக்கும். எப்ப வேண்டுமானாலும் பார்க்கற மாதிரியான படங்கள்".

அவள் தலையை வேகமாக ஆட்டினாள்.

"என்ன உங்களுக்கு பிடிக்காதா மாலினி?"

"கோபால் நீங்க சொன்னா நம்ப மாட்டீங்க. ஏதோ பாஸை குஷிபடுத்தறேன்னு நினைப்பீங்க".

"ஹே நான் உங்க பாஸ் இல்லை. டான் ஸ்டில் தான் நம்ம எல்லோருக்கும் பாஸ். நீங்க தைரியமா சொல்லுங்க".

"நீங்க சொன்ன அத்தனை நடிகர்களும் என் ஃபேவரைட்".

"ஓ. நமக்குள்ள இத்தனை ஒற்றுமையா? ஆச்சர்யமா இருக்கு. மௌன ராகம் பார்த்திங்களா?"

"பத்து தடவை கோபால். மோகனுடைய நடிப்பு வாவ். பாட்டும் சூப்பர்ப். மன்றம் வந்த தென்றலுக்கு மஞ்சம் வர நெஞ்சம் இல்லையோ? வாலிக்கு ஒரு வணக்கம்" என்றாள்.

"உங்க குடும்பத்தை பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்" என்றான்.
சில நிமிடம் மௌனமாக இருந்துவிட்டு, "நாங்க மூன்று சகோதரிகள். ஆண்

வாரிசுக்கு ஆசைப்பட்டு எல்லாம் பெண். அக்கா லவ் மேரேஜ்".

"சிங்கப்பூர்ல இருக்கா. தங்கச்சி 10த். நீயும் யாரையாவது காதலிச்சுக்கோன்னு எங்க வீட்ல சொல்லாத குறை தான். அப்பா ரீடயர்ட். லோயர் மிடில் க்ளாஸ் குடும்பம். அவங்களை பொருத்த வரையும் காதல் கல்யாணம்னா காலணா செலவு இல்லைன்னு நினைப்பு. அவள் சைகையுடன் பேசிக் கொண்டிருந்தாள்".

மென்மையான குரல் என்றாலும் குரல் அதிகரித்திருந்தது.

இரவு நேர பயணம். அனைவரும் தூங்கியிருந்தனர். அவள் குரல் தொந்திரவாக இருக்கக் கூடாது என்று நினைத்தான்.

"மாலினி எல்லோரும் தூங்கிட்டாங்கன்னு நினைக்கிறேன். நாம ஒரு சின்ன விளையாட்டு விளையாடுவோம். யாருக்கும் தொந்திரவு இருக்காது. நாங்க பள்ளிக் கூடத்தில விளையாடுவோம். நான் ஒரு கதையோட முதல் வரி எழுதுவேன். நீங்க இரண்டாவது வரி எழுதனும். நாம கதையை எப்படி வேண்டுமானாலும் மாற்றிக்கிட்டே போகலாம் என்ன?" என்று கேட்டவாறே காபின் விளக்கை ஏற்றிவிட்டு காகிதங்களைத் தேடினான்.

"அருமையான யோசனை இந்தாங்க" என்று ஒரு பழைய ஒரு குயர் நோட்டு புத்தகத்தை தந்தாள்.

"என்ன இன்னும் பள்ளிக்கூட பசங்க மாதிரி என்றான் கிண்டலாக.
இது என்னோட 20 வருஷமா இருக்கு. மனசுல வர்றதெல்லாம் எழுதுவேன் இதுல".

"நான் படிக்கலாமா?" என்று கேட்டான்.

அவள் தயங்கினாள்.

"வேண்டாம் பரவாயில்லை" என்றுவிட்டு காலி பக்கத்தை தேடினான்.
ஒரு காலி பக்கத்தின் எதிர்புறத்தில் பத்தாம் பசலியா நான் என்ற தலைப்பில்

ஏதோ எழுதியிருந்தாள்.

"நாம விளையாட்டை ஆரம்பிக்கும் முன்னே இதை மட்டுமாவது படிக்கலாமா?" என்று அனுமதி கேட்டான்.

அவள் வெட்கத்துடன் சரி என்று தலையாட்டினாள்.

பத்தாம் பசலியா நான்?

ஐந்து மணிக்கு வேலை முடிந்து ஆறு மணிக்கு வீடு வந்தால் - நான் பத்தாம் பசலியாம்
மொபைல் போனில் இரவு முழுக்க ஆண்களுடன் பிதற்றாவிட்டால் - நான் பத்தாம் பசலியாம்
ஆண்களின் ஆடையணிந்து அங்கங்கே கிழிக்கவில்லையென்றால் - நான் பத்தாம் பசலியாம்
ஆடை மாற்றுவது போல் ஆடவரை மாற்றாவிட்டால் - நான் பத்தாம் பசலியாம்
உதட்டுக்கு மேல் சாயம் போட்டு தினம் நடிகையாகவில்லையென்றால் - நான் பத்தாம் பசலியாம்
ஆடவர் போல் மீசை வளர்த்து இவர்கள் போகும் பார்லர் போகவில்லையென்றால் - நான் பத்தாம் பசலியாம்
கற்பத்தை தினம் கலைத்து கருவறையை பிணவறையாக மாற்றவில்லையென்றால் - நான் பத்தாம் பசலியாம்
கட்டினவன் ஒருவனிருக்க கண்டவனுடன் உறவு கொள்ளும் வேசியாகாவிட்டால் - நான் பத்தாம் பசலியாம்
ஏனடி பெண்ணாக நீ இல்லை என்று கேட்டால் என்னையே நீ பெண்ணா எனும் இவர்களுக்கு - என்றும் நான் பத்தாம் பசலிதான்!

"அருமையான கருத்து. அழகான கவிதை. தைரியமான வெளிப்பாடு" என்று மனமாற பாராட்டினான். "நீங்கள் ஏன் இதை பிரசுரிக்க கூடாது?"

"கோபால், என்னுடைய கருத்துகள் எல்லாமே காலத்திற்கு ஒவ்வாதவையாகவே

இருக்கின்றன. இவையெல்லாம் நானும் என்னுடைய புத்தகமும் மட்டுமே பராமரிக் கொள்பவை".

ஒரு வரி ஒருவர் கதை எழுதும் விளையாட்டு துவங்கியது. அவர்கள் நெவார்க் சென்று அடையும் வரை அது தொடர்ந்து.

இடையில் இலக்கிய பரிமாற்றங்கள். காரல் மார்க்ஸ் விட்மன் ரூசோ ஜேன் ஆஸ்டின் பாலகுமாரன் சாண்டில்யன் இந்து மதம் கண்ணதாசன் வாலி வைரமுத்து என்று இரு ஒத்த கருத்துகளும் ஒத்த அறிவும் படைத்த இரண்டு அறிவு ஜீவிகள் இதுவரை காணாத ஒரு நட்பை ஒரு ஒத்த அலைவரிசையை கண்டு விட்ட மகிழ்ச்சியில் பேசி விவாதித்து வாதித்து அரற்றி கூக்குரலிட்டு சங்கமித்து கொண்டிருந்தனர்.

# 4

வெறும் தொழில் முறை விசாவில் வருபவர்களுக்கு வீடு வாடைக்கு கிடைக்காது. அதனால் மாலினி ரமதா ஓட்டலில் தங்கியிருந்தாள். அலுவலத்திலிருந்து சுமார் 20 நிமிட தொலைவு.

கோபால் அவளுடைய கார் ஓட்டுனன் ஆக மாறியிருந்தான். தினமும் அவளை அலுவலகத்திற்கு அழைத்து வருவது. பிறகு மாலை விடுதியில் கொண்டு விடுவது. இடையில் பட்டேல் மார்கெட்டில் அவளுக்கு வேண்டிய உணவு பொருட்களை வாங்கிக் கொடுப்பது என்று பொழுது கழிந்து கொண்டிருந்தது.

தினமும் அவளிடமிருந்து 'குட் மார்னிங்' என்று ஒரு இமெயில் வரும். அழகான ரோஜாப்பூ படங்களுடன். "இவளுக்கு எங்கிருந்து இத்தனை ரோஜாப்பூக்கள் கிடைக்கிறது? நானும் தான் இன்டெர்நெட்டில் பார்க்காத இடமே இல்லை!" முதல் இரண்டு நாள் ஏதோ அனுப்புகிறாள் என்று நினைத்தவன் அது வாடிக்கையாகிவிட்டதை உணர்ந்தான். தினமும் காலையில் அதை எதிர்பார்க்கத் தொடங்கினான்.

சிலியா தூரத்தில் நிழலாக ஆகிக் கொண்டிருந்தாள். மாலினி நிழலிருந்து நிஜமாகிக் கொண்டிருந்தாள். அவனுக்கு இப்படிப்பட்ட நட்பு தேவைப்பட்டது. அடிவாங்கிய பூனை. பல நாளாக அறிவுப்பசிக்கும் சோறு இல்லாமல் இருந்ததல்லவா?

ஒரு சனிக்கிழமை "இங்கே கோவில் ஏதாவது இருக்கா" என்று கேட்க அவனும் அவளை நெவார்க் அவென்யூ ஜெர்ஸி நகரத்திலிருந்த சிவாலயத்திற்கு அழைத்துச் சென்றான். வேண்டுதல் முடிந்ததும் கையிலிருந்த ஒரு இனிப்புப்

பண்டத்தை அவனிடம் கொடுத்தாள். "இன்னிக்கு என் பிறந்த நாள்" என்றாள்.

"ஹேய், ஏன் இதை முதல்லே சொல்லலே" என்று கோபித்துக் கொண்டான். பிறகு அவளை பாம்பே லார்ட்ஸ் இந்திய உணவு விடுதிக்கு அழைத்துச் சென்று விருந்து கொடுத்தான்.

வாராவாரம் கோவிலுக்கு வருவதும் வெளியே உண்பதும் வழக்கமாகியிருந்தது. இந்த பழக்கம் அவர்களை நெருக்கமாக்கியிருந்தது.

ஒரு நாள் மாலினி, "வெளியே சாப்பிட்டு என் நாக்கு செத்துப் போச்சி கோபால். நீங்க எனக்கு சீக்கிரம் விசா ஏற்பாடு செய்தால் நான் ஒரு வீடு எடுத்து சமைச்சி சாப்பிடுவேன். உங்களுக்கு புண்யமா போகும்" என்றாள்.

"மாலினி, நீங்க கம்ஃபர்டபிளா நினைச்சீங்கன்னா என் வீட்ல ஒரு அறை காலியா இருக்கு. நீங்க பேயிங் கெஸ்டா வரலாம்" என்றாள்.
அவள் சிறிது நேரம் யோசித்துவிட்டு "சரி" என்றாள்.

(குமரிப்பெண்ணின் உள்ளத்திலே குடியிருக்க நான் வரவேண்டும்
குடியிருக்க நான் வருவதென்றால் வாடகை என்ன தரவேண்டும்)

அவள் வருவதற்கு முன் சிலியாவின் அறையை சுத்தம் செய்து அவளுக்காக ஏங்கி நின்ற போஸ்டரையும் அகற்றினான். மாலினி சிலியாவின்  இடத்தை பிடிக்கிறாளோ இல்லையோ அதற்கு சிலியாவின் நினைவுகள் தடையாகக் கூடாது என்று நினைத்தான்.

இதனிடையே சிலியா ராஜை தொடர்பு கொள்ள முயன்றாள். அவன் விழுப்புரத்தில் இருந்த நேரம். அவன் தொலைபேசி வேலை செய்யவில்லை. ஆனால் அவளோ ராஜ் தன் மீது கோபமாக இருக்கிறான். அதனால் தொலைபேசி எண்ணையும் மாற்றிவிட்டான் என்று நினைத்தாள்.

ஒரு முறை க்ரிஸிடம் "ராஜ் எப்படியிருக்கான்" என்று கேட்க. "ஓ அவன் நன்றாக இருக்கிறான். அவனுக்கு ஒரு புது நட்பு கிடைத்திருக்கிறது" என்று சொன்னான்.

அது ஆணா பெண்ணா என்று சொல்லவில்லை. கேட்க இவளுக்கு மனமும் வரவில்லை.

ஏதாவது காரணத்தை கொண்டு அவனை பார்க்கவேண்டும் என்று முடிவுசெய்தாள். காரணம் தானாக அவளைத் தேடி வந்தது. அவளுடைய பல்கலைகழகத்தின் ஆண்டு பத்திரிகையின் சிறப்பு அம்சமாக ராஜ் வந்து பேசியதை குறிப்பிட்டு அவனுடைய புகைப்படத்தையும் வெளியிட்டிருந்தனர். அந்த பத்திரிகையின் ஒரு பிரதியை எடுத்துக் கொண்டு ராஜின் வீட்டிற்கு புறப்பட்டாள்.

மாலினி வந்த சில நாட்களிலேயே குடும்பத் தலைவியாக மாறியிருந்தாள். வீட்டை சுத்தம் செய்வதும் அவனுக்காக சமைப்பதும் காலையும் மாலையும் அவனுடன் சேர்ந்து பூஜை செய்வதும் பிறகு பல மணி நேரம் பேசுவதும் இணைந்து வேலைக்கு செல்வதுமாக ஒரு தாலி கட்டாத உடல் உறவு இல்லாத குடும்பம் நடந்து கொண்டிருந்தது.

கதவைத் தட்டிய சிலியாவுக்கு ஒரு அழகான எளிமையான இந்திய பெண் கதவை திறந்ததும் தலைச் சுற்றியது. ஒரு வேளை அவனுக்கு திருமணம் ஆகிவிட்டதோ. முரளி கூட ஒன்றும் சொல்லவில்லையே? ராஜின் பெற்றோர்களிடம் பேசி பல வாரங்கள் ஆகிவிட்டது. அவர்களிடம் என்ன பேசுவது? எப்போதும் என் திருமணத்தை பற்றியே பேசுகிறார்கள்.

ராஜை நிரந்தரமாக இழந்துவிட்டேனோ?. அவள் தான் கீழே விழுந்துவிடப்போவதாகவே நினைத்தாள்.

மாலினி கதவைத் திறந்து "யார் வேண்டும்" என்று கேட்டாள்.
"யாரா? இது என் வீடடி பெண்ணே. நீ யார்" என்று கேட்க வேண்டும் போலிருந்தது.

"நான் ராஜகோபாலுடைய தோழி. அவரைப் பார்க்க வேண்டும்" என்றாள்.

"இது யாரடா அவனுடைய தோழி" என்று நினைத்தபடியே மாலினி "உள்ளே வந்து அமருங்கள். அவர் தியானத்தில் இருக்கிறார்" என்றாள்.

"இன்னும் தியானம் செய்கிறாயா நீ. யார் இந்தப் பெண்? அவள் என் அறைக்குள் ஏன் செல்கிறாள்? அவள் என் அறையில் மட்டும் தான் இருக்கிறாளா இல்லை உன் இதயத்திலும் குடி புகுந்து விட்டாளா?" என்று பல கேள்விகள் ராஜை உலுக்கி கேட்கத் தோன்றியது.

ராஜின் உடல் தளர்ந்து மெல்ல சகஜ நிலைக்கு வந்தது. "ஓம்" என்று சொல்லிவிட்டு இறைவனை வணங்கிவிட்டு திரும்பியவனுக்கு சிலியாவைப் பார்த்ததும் ஒன்றும் புரியவில்லை. அவன் என்ன  நினைத்தான் என்று சொல்வதும் சற்றுக் கடினம் தான்.

இவள் ஏன் வந்தாள்?

இவள் ஏன் இத்தனை நாளாக வரவில்லை?

இவள் வராமலே இருந்திருக்கலாமே?

அப்பாடா இப்போதாவது வந்தாளே. எங்கே வராமல் போய்விடுவாளோ என்று நினைத்தேன்.

இப்படியெல்லாம் நினைத்த அவனுக்கு அவளை ஓடிச் சென்று கட்டிப் பிடிக்கத் தோன்றியது. மாலினி வீட்டில் என்று நினைத்துக் கொண்டு, "வா சிலியா உட்கார்" என்றான்.

அவள் அவன் தன்னை ஓடி வந்து கட்டியணைப்பான் என்று எதிர்பார்த்தாள். அவன் அப்படி செய்திருந்தால் அவனை அணைத்து அவன் கண்களில் நெற்றியில் மார்பில் தோளில் முத்தமிட்டு, "முரளி ப்ரவீணா சொன்னது எனக்கு உறைத்துவிட்டது வேலையின் காரணமாக கலிபோஃர்னியாவில் மாட்டிக் கொண்டேன் இனி உன்னைவிட்டு எக்காரணம் கொண்டும் பிரிய மாட்டேன்" என்று கதறத் தயாராக இருந்தாள்.

ஆனால் அவனுடைய "வா சிலியா" என்று உணர்ச்சி இல்லாத ஒரு வார்த்தை

அவளை கொன்றுப் போட்டது. சோர்ந்து போய் நாற்காலியில் அமர்ந்தாள்.

"சொல்லு சிலியா என்ன விஷயம்?"
(எப்படி இருக்கேன்னு நீ கேட்டியா?)

அவள் அவனை ஒற்றுப் பார்த்தாள். அந்த வெறித்தனமான காதல் எங்காவது தென்படுகிறதா என்று. அவன் முகத்தில் சலனமில்லாமல் இருந்தான்.

"எப்படி இருக்கே ராஜ்?"

"நல்லா இருக்கேன் சிலியா. நீ? "

"நான் நல்லா இருக்கேன். ஆனா கொஞ்சம் வேலை அதிகம்".

"அப்படியா?"

"உன்னைப் பல முறை போனில் தொடர்பு கொண்டேன்" என்றாள்.

(பொய் சொல்கிறாயா பெண்ணே?)
"அப்படியா? எப்போ?"

"ஒரு இரண்டு மாசத்திற்கு முன்".

"ஓ அப்போ நான் விழுப்புரத்தில் விடுமுறையில் இருந்தேன்".

(என்னிடம் சொல்லாமல் எப்படி போனாயடா?)
"விடுமுறையா?"

"இல்லை. வேலை நிமித்தமாக போனேன். அப்படியே அப்பா அம்மாவை பார்த்து வந்தேன்".

"யூ மெட் யூவர் மதர்?"

"ஆம்".

"யூ மெட் மை மதர்?" அவள் கண்கள் அந்த ராமனைத் தேடியது.
அவனால் அவள் பார்வையை சந்திக்க முடியவில்லை.

"ஆம். செல்லியம்மனையும் தரிசித்து வந்தேன்".

"என்ன கேட்டாய்?"

"ஒன்றும் இல்லை".

"ஒன்றுமே கேட்கவில்லையா?"
(என்னை கேட்டிருந்தால் இப்போது உன்னிடம் சரணமடா நான்)

அமைதியானான் ராஜ்.

மாலினி அவள் அறையிலிருந்து வெளி வருவதைப் பார்த்த ராஜ், "மாலினி இவள் சிலியா என் தோழி"
(வெறும் தோழியா நான் உனக்கு?)

"இவள் மாலினி என்னுடன் பணிபுரிகிறாள். இப்போது என்னுடைய பேயிங் கெஸ்ட்".

(அடேய் அவளை எப்படி என் அறையில் தங்கவிட்டாய்? அவனை அப்படியே கடித்துக் குதறிவிடுவதைப் போலப் பார்த்தாள்).

மாலினியின் முன் தன் பிரத்யேக பேச்சை அவள் பேசவிரும்பவில்லை.

"ராஜ், உங்க போட்டோ எங்க கல்லூரியின் ஆண்டு விழா பத்திரிகையில் பிரசுரம் ஆகியிருக்கு அதை கொடுத்துவிட்டு போக வந்தேன்".

(கள்ளி. வெறும் அதற்கு மட்டும் தான் வந்தாயா. மீண்டும் அமைதியாக சென்றுக் கொண்டிருந்த என் வாழ்கையில் ஒரு அதிரடி தந்துவிட்டாயே?)

"வாவ். கோபால் உங்க போட்டோவா என்று அவன் வாங்கும் முன்னே மாலினி வாங்கிப் படித்தாள்.

"வாழ்த்துகள்" என்று அவன் கையை குலுக்கினாள்.
(ஏய் அது எனக்கு சொந்தமான கை)

"சரி ராஜ், நான் கிளம்பறேன்" என்று அவன் பதிலுக்கு காத்திராமல் அவள் கிளம்பிச் சென்றாள்.

மாலினியோ "உங்களை நான் ராஜ் என்று கூப்பிடட்டுமா" என்று கெஞ்சலாக கேட்டாள்.

"கூப்பிடேன்" என்று சொல்லிவிட்டு அவன் தன் அறைக்கு சென்றுவிட்டான்.
(அமெரிக்கப் பெண்ணையே ஏற்றுக் கொண்டுவிட்ட பெற்றோர் ஒரு ஐயர் பெண்ணையா மறுக்கப் போகிறார்கள்)

அந்த பிரதியை எடுத்து அவனுடைய புகைப்படத்தை உற்றுப் பார்த்தாள். இதுவரையில் நான் பார்க்காத ஒரு கதாபாத்திரம். அறிவு, அழகு, திறமை, கண்ணியம் எல்லாம் கொண்ட ஒரு ரேர் ப்ரீட். பல பேர் காதல் கடிதம் கொடுத்தும் ஒருவர் கூட தன்னுடைய கற்பனை கணவனின் அருகில் கூட வரவில்லையே என்று நினைத்துக் கொண்டிருந்தவள். "ராஜ், ராஜ்" என்று சொல்லிப் பார்த்தாள்.

என் தேடல் முடிந்துவிட்டதா?

அவள் தன் ஒரு குயர் நோட்டுப் புத்தகத்தை தேடினாள்.

# 5

நியூ ஜெர்ஸியில் குளிர்காலம் தொடங்கிவிட்டது. பனிமழை பெய்வதும் மதியம் 4 மணிக்கே இருட்டிவிடுவதுமாக ஒரு சோர்வான காலம். சூரியன் சோம்பலாக அப்போது இப்போது என்று வந்து சென்றுக் கொண்டிருந்தான். பல மணிநேரம் வீட்டிலேயே கழிக்க வேண்டிய நிலை.

சிலியா அவனைப் பார்க்கவே தயங்கினாள். மாலினி அவளுக்கு பெரிய தடையாக தோன்றியது. க்ரிஸ் மூலம் அவர்களிக்கிடையே ஒன்றுமில்லை என்று அறிந்தும் கூட அவளால் அமைதியாக இருக்க முடியவில்லை. ஆண் பெண் திருமணமாகதவர் ஒரிடத்தில் பணிபுரிபவர் சேர்ந்திருப்பது அமெரிக்காவில் சகஜமில்லையோ? அவள் மணம் ஏற்றுக் கொள்ளவில்லை.

ராஜ் ஒரு காந்தம். அவனிடம் சில நொடிகள் பழகியவர்கள் கூட அவன் மேல் காதல் வயப்படுவது சகஜம். பல்கலைகழகத்தில் அவன் பேச்சை கேட்டு மயங்காதவர்களே இல்லை. அவன் பேசினால் அவன் ரம்பை ஊர்வசியை தன் வசமாக்கும் சக்தியிருப்பதாக நினைத்தாள்.

மாலினி அதே காந்தத்தின் மூலம் இழுக்கப்பட்டுக் கொண்டிருந்தாள்.
அவளோ ஒரு மூலையில்
உனக்காக உயிர் பூத்து நின்றேன் உனக்காக கன்னிகாத்து நின்றேன்
இன்னும் நானும் சிறுமிதான் எப்போதென்னைப் பெண் செய்வாய்

என்று மனதில் பாடினாள்.

இன்னொரு அறையில் அவனோ

உனக்காக பரிசு ஒன்று கொண்டேன் நான் மழையல்லவே
நீ ஏன் ஒதுங்கி நின்றாய்

என்று பாடிக் கொண்டிருந்தான். அவன் மன நிலையை வைத்து யாருக்காக பாடினான் என்று சொல்ல முடியவில்லை.

அவனுடைய புத்தக அலமாரியிலிருந்து பட்டினத்தார் பாடல்கள் என்ற தொகுப்பை எடுத்து புரட்டினாள். சட்டென்று கண்ணில் பட்ட ஒரு பாடலை உறக்கப் படித்தாள்.

நாறும் உடலை நரிப்பொதி
சோற்றினை நான்தினமும்
சோறும் கறியும் நிரப்பிய
பாண்டத்தைத் தோகையர்தம்
கூறும் மலமும் இரத்தமும்
சோரும் குழியில்விழாது
ஏறும்படியருள் வாய்இறை
வாகச்சி ஏகம்பனே!

"ராஜ் இதுக்கு என்ன அர்த்தம்? "

"இதுவா! இது நீ படிக்க வேண்டாம் மாலினி". (நீங்கள் நீ ஆகியிருந்தது).

"எதுக்கு?"

"அதுக்கு மனசு திடமாக இருக்கனும்".

"என் மனசு திடமில்லைன்னு சொல்றீங்களா?"

"இல்லம்மா. இந்த பாட்டு கொஞ்சம் கஷ்டமானது".

"அதுக்குத்தான் உங்ககிட்ட விளக்கம் கேட்கறேன்".

"கஷ்டம்னு நான் சொன்னது தமிழுக்காக இல்லை. அதனுடைய விளக்கத்திற்காக!"

"தயவு செய்து சொல்லுங்களேன்".

"நான் சொல்றேன். ஆனா நீ மூட் அவுட் ஆகக் கூடாது. சரியா?"

"ஓகே. சொல்லுங்கள்". அவள் மாணவியானாள். அவன் குருவானான். பல மாதங்களுக்கு முன் சிலியா இருந்த இடத்தில் இன்று மாணவி மாலினி. மாலினி எந்த சிலியாவுக்கும் குறைந்தவளில்லை. அழகில் வேண்டுமானால் அந்த தேவதைக்கு ஈடில்லை. ஆனால் அறிவில் அடக்கத்தில் கண்ணியத்தில் ராஜின் மீது கொண்ட மதிப்பில் இருவரும் சரிசமம்.

"இதுக்கு என்ன விளக்கம்னா... வேண்டாம் மாலினி. ரொம்ப அசிங்கம்".

"நான் ஒரு அடல்ட்".

"அதில்லம்மா. நம்ம வயசில இருக்கறவங்க படிக்கக் கூடாத விஷயம்".

"ஏன்?"

"வாழ்கையே வெறுத்துப் போயிடும்".

"அப்ப அறிவுக்காக புத்தகங்கள் படிக்கறது தப்பா?"

"தப்பில்லை பெண்ணே. ஆனா எந்த புத்தகம் படிக்கிறோம் அதுல தான் பிரச்சனையே!"

"நீங்க மட்டும் படிக்கலாமா?"

"சரி நான் சொல்றேன்".

"நாறும் உடல் நான் தினமும் சோறும் கறியும் நிரப்பிய பாண்டம் - இதை இப்படி படிக்கனும்".

"நாம தினமும் சோறு போட்டு இந்த உடம்பை வளர்க்கிறோம் ஆனா"
நரிப்பொதி சோற்றினை
"நாம செத்துட்டா இந்த சோத்து மூட்டை நரிகள் வந்து தின்னத்தான்"

தோகையர்தம் கூறும் மலமும் இரத்தமும் சோரும் குழி
"பெண்ணோட அந்த அங்கம் வெறும் மலம் ரத்தம் கொண்ட சிறுநீர் கழிக்கின்ற இடம்"

குழியில் விழாது ஏறும் படி அருள்வாய் இறைவா கச்சி ஏகம்பனே
"அந்த மாதிரி ஒரு கேவலமான மட்டமான குழியில் விழாமல்
என்னை காப்பாத்துப்பா கச்சியில் இருக்கும் சிவனே".

"இதுதான் அர்த்தம்".

அவளுக்கு வாந்தி வரும் போல் இருந்தது. ஓடிச்சென்று பாத்ரூமில் நுழைந்தாள். சில நிமிடங்களில் முகம் கழுவி வெளியே வந்தாள்.
ஒரு பெண்ணின் அந்தரங்க பாகம். ஒரு உயிரை உலகுக்கு கொண்டுவரும் புனித இடம். அந்த இடத்தை இதுவரை இவ்வளவு கேவலப்படுத்தி யாரும் எழுதியதில்லை. அப்படி எழுதியிருந்ததை அவள் படித்ததும் இல்லை. அவளால் அதை ஜீரணிக்க முடியவில்லை.

அவள் அதிர்ந்து போயிருந்தாள். கவிதையோ கட்டுரையோ கதையோ அதில் லயித்து போயிருக்க வேண்டும். அதன் ஊடே இருந்து படிக்க வேண்டும். திரைப்படத்தில் நகைச்சுவை காட்சி வந்தால் சிரிக்க வேண்டும். சோக காட்சி வந்தால் அழவேண்டும். நல்ல காட்சியமைப்பில் நாம் அழமாட்டோம் என்று

அடம்பிடித்து உட்காரக்கூடாது. காட்சியின் வலிமை கவிதையின் உள்ளர்த்தம் அதை உணர்ந்து படிப்போருக்கு பல வகையான உணர்வுகள் வந்து போகு ஏதுவாகிறது. அந்த பல உணர்ச்சிகள் நிஜமாகவே அனுபவிக்காமல் பெறவதற்கே கதை கவிதை படிப்பது.

அந்த உள்ளர்த்தத்தை உணர்ந்து அவள் கலங்கிப்போனாள். இதை படித்தபிறகு எந்த ஆண்மகனும் உடலுறுவு கொள்வதை கேவலமாக நினைப்பான்.

அவள் கண்கள் கலங்கியருந்தன. அவன் அவள் அருகில் சென்று அமர்ந்தான். அவள் கைகளைப் பிடித்தான். "மாலினி இதை சீரியஸா எடுத்துக்காதே. இது காலம்காலமா கவிஞர்கள் சொல்லி வருவதுதான். பெண்கள் மோகம் வேண்டாம்னு எழுதாத கவிஞர்களே இல்லை. ஆனா அவங்கல்ல பெரும்பாலானோர் கல்யாணம் ஆனவங்க. அவங்க சொல்றதையெல்லாம் யார் கேட்கறா?"

"அப்ப ஆண் பெண் உறவு புனிதமானது இல்லையா?"

"இல்லை மாலினி. ஆணக்கு பெண் ஒரு காமப்பொருள்தான். அவன் பசி அடங்கியதும் அவன் ஒரு பெண்ணை வேலைக்காரியாகத்தான் நினைக்கிறான்".

"அப்ப குழந்தை பிறத்தலும் கேவலம் தான் இல்லையா?"

"ஆம்".

"என்ன சொல்றீங்க?"

"ஆமாம் மாலினி. ஒரு ஆணும் பெண்ணும் காமத்திற்காக தன் சுயநலத்திற்காக உடலுறுவு கொள்கிறார்கள். அது எப்படி பெரிய தியாகமாகும்?"

"அப்ப தாய்மை?"

"தாய்மையோட அடிப்படையே மிருக உணர்ச்சிதான். அந்த காமம்தான். ஒரு பெண் தன்னுடைய உணர்வுகளை இன்னும் 30 விநாடி அடக்கியிருந்தால்? அப்படியிருக்க தாய்மை எப்படி புனிதமாகும்?"

"என்ன சொல்றீங்க ராஜ். இது உங்களோட கருத்தா?"

"இல்லை மாலினி. இது என்னோட கருத்து இல்லை. மனிதனோட பெரிய துயரம் பெண்தான். அந்தக் குழியில் அவன் விழாவிட்டால் உலகத்தில் அவன் பல சாதனைகள் செய்யமுடியும் இறைவன் அருளை பெறமுடியும் அப்படிங்கறது தான் இந்த பாடலோட கருத்து".

"நீங்க யாரையாவது காதலிச்சிருக்கீங்களா?"

இது தேவையில்லாத கேள்வி என்று நினைத்தான். ஆம் என்று சொல்லி மாலினி அருகில் வர தடைகளை உண்டாக்க அவன் விரும்பவில்லை. இல்லை என்று பொய் சொல்ல அவனுக்கு மனதில் தெம்பில்லை. அமைதியாக இருந்தான்.

"சொல்லுங்க?"

"எதுக்கு கேட்கறே?"

"இல்லை, நீங்கள் காதலிக்கறீங்களோ இல்லையோ நாளைக்கு உங்களுக்கு திருமணம் ஆகும். நீங்க உங்க மனைவியோட உறவை எப்படி மதிப்பீங்க?"

"மாலினி. இந்த மாதிரி புத்தகங்கள் படிக்கறதால என்னோட அறிவையும் பேச்சுத்திறனையும் வளர்த்துக்கறேன். எல்லா கருத்துக்களையும் படிக்கிற தைரியமும் மனப்பக்குவமும் வேண்டும். ஒருத்தர் பெரிய எழுத்தாளர், அதனால அவர் சொல்ற எல்லா கருத்துக்களையும் ஏத்துக்கனும்னு அவசியமில்லை. எனக்குன்னு சொந்த கருத்துகள் இருக்கு. ஒவ்வொருத்தருக்கும் இருக்கும். இருக்கனும்".

"உங்க கருத்தைத் தான் நான் கேட்டேன்".

"நான் பெண்களை மதிக்கிறேன் மாலினி. தாய்மையை புனிதமா நினைக்கிறேன். மனைவியை என்னில் ஒரு பாதியா நினைக்கிறேன். துரதிர்ஷ்டவசமா ஆணுடைய சிறுநீர் உறுப்பும் பெண்ணுடைய சிறுநீர் உறுப்பும் சேர்ந்தா தான் மனித இனம் வளரும். இது ஆண்டவன் படைப்பு. அதை நாம ஏத்துக்கனும். மதிக்கனும். விவாதம் செய்ய முடியாது. நம்ம சமுதாயத்தையே எடுத்துக்கோயேன்? காலையிலே மாமி மடி ஆசாரம்னு சொல்றா. மாமா எச்சி பண்ணிக்குடிக்காதேன்னு சொல்றார். தனி தட்டு தனி டம்ளர். மலம் கழிக்கப் போகும் போது கூட பூணூல் கண்ட இடத்தில பட்க்கூடாதுன்னு காதில் சுத்திக்கிறோம். ஆனா? ராத்திரியில்? ஒரு ஆண் ஒரு பெண்ணின் உதடுகளை கடித்து அவன் எச்சிலை உண்கிறான். அவனுடைய வாய் அவள் உடலில் படாத இடங்களே இல்லை. அவளுடைய சிறுநீர் குழியை அவன் ராஜ கிரீடமாக அணிகிறான். அப்போது எங்கே போயிற்று இந்த மடி ஆசாரம் தீட்டு எல்லாம்? அவன் பூணூலை கழற்றிவிடுகிறானா? அந்த புனித நூல் அவளுடைய அந்தரங்களில் படுவதில்லையா?"

அவள் அமைதியானாள். அவனுடைய விளக்கம் அவளை வியக்க செய்தது. ஒருவன் எந்த அளவுக்கு யோசிக்க முடியும்? அறிஞர்கள் என்று புத்தகத்தில் படித்ததோடு சரி. இப்போது தான் ஒரு அறிவு ஜீவியை நேராக பார்க்க முடிந்தது.

என் தேடலும் முடிந்தது. இவனுக்காகத்தான் இத்தனை நாளும் காத்திருந்தேன்.

அவன் சில நிமிடங்களில் அவள் கையை விட்டிருந்தான். அவள் மீண்டும் அந்தக் கையை பிடித்துக் கொண்டாள்.

"மாலினி, நீ அமைதியாயிட்டேன்னா இன்னொரு பாடல் படிக்கிறேன் கேளு".

"வேண்டாம் ராஜ். இத்தனை கடினமான கருத்துக்களை ஏத்துக்கற பக்குவம் வரவில்லை எனக்கு".

"இல்லை. இது கொஞ்சம் எளிமையானது".

"சரி".

வேதத்தின் உள்பொருள் மண்ணாசை மங்கையை விட்டுவிடப்
போதித்த வன்மொழி கேட்டிலையோ செய்த புண்ணியத்தால்
ஆதித்தன் சந்திரன் போலே வெளிச்சம் அது ஆம் பொழுது
காதற்ற ஊசியும் வாராது காணும் கடைவழிக்கே

அவன் அழகான உச்சரிப்பில் பிரித்து படித்தான். அவள் புரிந்துக் கொண்டாள்.

"ராஜ், இத்தனை நாளும் நான் பலபேரோட பழகியிருக்கேன். என் தோழிகள் எல்லாம் எனக்கு காதல் உணர்வேயில்லைன்னு முடிவு பண்ணிட்டாங்க. நான் என்னை ஒரு முக்கிய பிறப்பா நினைக்கிறேன். அதனால என் வாழ்கையில் வருபவன் ஒரு சிறந்த ஆண்மகனாக இருக்கனும். அப்படித்தான் நான் நினைச்சு இத்தனை நாளும் காத்திருந்தேன்".

"இப்போ கிடைச்சிட்டானா?"

"ஆமாம்".

"யாரு?"

"சொல்ல நினைக்கிறேன். ஆனா பயமா இருக்கு?"

"என்ன பயம்?"

"அவன் எட்டாத தூரத்தில் இருக்கிறான்".

"யாருமே எட்டாத தூரத்தில் இல்லை மாலினி".

"அப்ப சொல்லலாம்னு சொல்றீங்களா?"

"ஆஃப் கோர்ஸ்".

அவள் தரையில் அமர்ந்து அவன் இரு கைகளையும் எடுத்துக் கொண்டாள்.

"ராஜ்... ராஜ்..."

அவளால் பேச முடியவில்லை.

"என்னை உங்கள் வாழ்கையின் ஒரு அங்கமாக ஏற்றுக் கொள்வீர்களா?" அவள் சொல்லி முடித்ததும் அவன் பதிலுக்கு காத்திராமல் அவள் அறைக்கு சென்று கதவடைத்துக் கொண்டாள்.

எது நடந்துவிடுமோ என்று பயந்தவனுக்கு அது நடந்தே விட்டது என்ற உணர்வு வந்தது. நெஞ்சம் கனத்தது. சிலியா நெஞ்சில் முள்ளாய் தைத்தாள். மாலினி தன் வாழ்கையில் வேகமாக நுழைய எல்லா முயற்சியும் எடுத்த ராஜுக்கு அவளே தன் காதலை சொல்லியும் கூட ஏற்றுக் கொள்ள பெரிய தடைக்கல்லாக எது இருக்கிறது என்று அவனாலே புரிந்துக் கொள்ள முடியவில்லை.

பட்டினத்தாரின் பக்கங்களை புரட்டினான். ஏதோ அதில் பதில் கிடைக்கும் என்பது போல.

வாய் நாறும் மூழல் மயிர் சிக்கு நாறிடும்
மைஇடும் கண் பீநாறும் அங்கம் பிணவெடி நாறும்
பெருங்குழி வாய் சீநாறும் யோனி அழல் நாறும்
இந்திரியச் சேறு சிந்தி பாய் நாறும் மங்கையர்க்கோ
இங்ஙனமே மனம் பற்றியதே!

அவனுக்கே இப்போது வாந்தி வரும் போலிருந்தது.

# 6

குளித்து முடித்து இறைவனடியில் அமர்ந்திருந்தான். அவளும் அன்று பூத்த மலராய் குளித்து முடித்து அவனருகில் வந்து அமர்ந்தாள். இத்தனை நாளும் இருவரும் சேர்ந்து அமர்ந்து இறைவனை வணங்கியபோதும் இன்று அவள் வந்த அமர்ந்ததும் அவனுள்ளே வேதியியல் மாற்றங்கள் தொடங்கியது.

அவளுடைய ஈர கூந்தலும் சோப்பின் மனமும் அவனை கிறங்கச் செய்தன. அவனுடைய கவனத்தை இறைவனிடமிருந்து திசை திருப்பின. சட்டென்று நடுவிலே எழுந்து உணவு மேசையருகில் வந்து அமர்ந்துக் கொண்டான்.

அதை பார்த்த அவளும் அவசரஅவசரமாய் சுலோகங்களை சொல்லி முடித்து அவனருகில் வந்தாள்.

அவன் தலையில் கை வைத்து அவனுடைய கேசங்களை கோதினாள்.

"ராஜ், என்னை மன்னிசிடுங்க. உங்க மனசுல நான் இருக்கேனான்னு தெரியாம என் காதலை சொன்னது தப்பு தான்".

"அதில்லை மாலினி. உன் மேல தப்பு இல்லை. காதலிச்சா சொல்லித்தான் ஆகனும்".

"நீங்க என்னை காதலிக்கனும்னு அவசியம் இல்லை. என்னை கல்யாணம் பண்ணிக்கவும் நான் கேட்கவில்லை. அதனால் நீங்கள் எந்த நெருக்கடியிலும் வரவேண்டாம்".

"இல்லை மாலினி".

"நான் உங்களை காதலிக்கிறேன். அது உண்மை. நீங்கள் உங்கள் பதிலை இப்பவே சொல்லனும்னு அவசியம் இல்லை. எத்தனை நேரம் வேண்டுமானாலும் எடுத்துக்கோங்க".

"இல்லை மாலினி. நான் உன்கிட்டே சொல்லவேண்டியது நிறைய இருக்கு".

"உங்களுக்கு எப்ப சொல்லத்தோணுதோ அப்ப கேட்க நான் தயாராக இருக்கேன். இப்ப ஆபீஸ்க்கு போகலாம் வாங்க" என்றாள்.

அமைதியாக உண்டுவிட்டு வண்டியில் இருவரும் பேசாமல் அலுவலகம் வந்து சேர்ந்தனர்.

இன்று அவளிடமிருந்து ரோஜாப்பூவுடன் "என்னை மன்னித்துவிடுங்கள்" என்று வந்திருந்தது.

அவனால் வேலையில் கவனம் செலுத்த முடியவில்லை. இப்படி அவனுக்கு ஆனதே இல்லை. சிலியா அவனை விட்டுப் போயிருந்தபோதும் அவன் வேலையில் கவனம் சிதறியது இல்லை. ஒரு ஆணுக்கு இரண்டு பெண்களில் யார் என்று முடிவு செய்யப் போகும் தருணம் தான் அவன் வாழ்கையிலேயே ஒரு கடினமான நேரமாக இருக்க வேண்டும்.

ஒரு காதலின் மதிப்பு இன்னொரு பெண்ணைப்பற்றி முடிவெடுக்க வேண்டிய நேரத்தில் தான் தெரிகிறது.

அவன் சிலியாவா மாலினியா என்ற குழப்பத்தில் இல்லை. சிலியாவும் அவன் வாழ்கையில் வர மறுத்து மாலினியிடம் உண்மை சொல்லி அவளும் விலகிவிட்டால் அவனுக்கு இன்னொரு காதல் கதையை துவக்கும் அளவிற்கு தெம்பிருக்கவில்லை.

இருவரையும் இழந்து தனிமரமாகிவிடுவேனோ என்று தவித்தான்.

சிலியாவின் கதைக்கு முற்றுப்புள்ளி வைக்காமலேயே இன்னொரு கதையை துவக்க அவன் தயாராக இல்லை.

பொய்களின் அடிப்படையில் மாலினியின் கதையை துவக்கவும் தயாராக இல்லை.

இப்படி இரு தலை கொள்ளியாகிப்போனான்.

அவன் குழப்பத்தில் இருந்தால் அவன் நாடுவது பகவத் கீதையை தான். ஏதாவது ஒரு பக்கத்தில் அவன் பிரச்சனைக்கு ஒரு விடை கிடைக்கும். இதை பல முறை அவன் அனுபவித்தும் இருக்கிறான்.

கணினியை இயக்கி பகவத் கீதையின் பிடிஎஃப் கோப்பை திறந்தான்.

இன்று அவனுக்கு விடை கிடைக்கவில்லை. ஆனால் ஒரு வழி கிடைத்தது.

இப்ப அமெரிக்காவில் பகல். இந்தியாவில் இரவு. கால் சென்டரில் ராஜூ இருப்பான். அவனுடைய அமெரிக்க எண்ணில் ஒரு போன் போட்டான். அது இன்டெர்நெட் மூலம் இந்தியாவில் அவன் மேசை மேல் இருந்த போனில் ஒலித்தது.

ராஜூ போனை எடுத்தான்.

"மச்சான் ராஜ் பேசறேன்டா".

"ஏய் எப்படிடா இருக்கே?"

"இருக்கேன்டா" என்றான் சுரத்தில்லாமல்.

ஆருயிர் தோழன் அவஸ்தையில் இருக்கிறான் என்று தெரிந்தது.

"என்ன பிரச்சனை மச்சான்".

"நீ ஃப்ரீயாதான் இருக்கே?"

"உனக்காக எப்பவும் ஃப்ரீதான் சொல்லு".

ப்ரவீணா கிருஷ்ணன் வந்து போனதிலிருந்து மாலினி கைபிடித்து தன் காதலை சொன்னதுவரை அனைத்தையும் சொல்லி முடித்தான்.

ராஜூ இவனைப்போல புத்தகங்களை கரைத்து குடித்தவனில்லை. ஆனால் வாழ்க்கை எனும் பாடத்தில் அவன் பி ஹெச் டி. ராஜகோபால் வெறும் ஒன்னாங் க்ளாஸ்.

"மச்சான், உன் ஹார்ட் டிஸ்க்கில் இடம் இல்லை. ஒரு ஃபயில் அங்கே இருக்கு. அதை டெலிட் பண்ணாம இன்னொரு ஃபயிலைப் போட்டால் அது எப்படி காப்பியாகும்?"

ராஜூ எந்த ஒரு பிரச்சனையும் தன் உதாரணங்களால் பல முறை சுலபமாக்கியருக்கிறான்.

"டேய், முதல்ல சிலியான்ற ஃபயிலை எரேஸ் பண்ணு. அப்புறம் மாலினின்ற ஃபயிலை காப்பி பண்ணு. ரொம்ப சுலபம்டா".

ராஜகோபால் தன் நண்பனின் அறிவை மெச்சினான்.

"ஆனா என் அபிப்ராயம் கேட்டீன்னா…. சரி விடு, என் அபிப்ராயதிற்கு என்ன வேலை".

"ஏய். சொல்லு. உன் அபிப்ராயம் என்ன? அதை கேட்கத்தானேடா போன் செஞ்சேன்".

"டேய் மச்சான். சிலியா இல்லாததாலேதான் நீ மாலினிகிட்டே நெருங்கினே.

அது உன் தேவைக்கு நீ தேடிக்கிட்ட ஒரு மாற்று ஏற்பாடு. மாலினியோட எதிர்பார்ப்புப்படி நீ இருந்ததாலே உன்னை காதலிக்கிறா. ஆனா சிலியா உனக்காக குதிரை கூட்டத்தைவிட்டுட்டு மான் கூட்டத்தில வந்து சேர்ந்திட்டா. மான் கூட்டத்திற்காக தன்னுடைய குணங்களை எல்லாம் மாத்திகிட்டா. இப்ப மறுபடியும் குதிரை கூட்டத்திலே அவளால போக முடியாது. மான் கூட்டம் அவளை ஒதுக்கிடுத்துன்னா அவ நடுத்தெருவில தான் நிக்கனும். அவ செஞ்ச யாகம் தியாகம் தவம் எல்லாம் அர்த்தமே இல்லாம போயிடும்டா. இது தான் என்னோடு அபிப்ராயம்".

"ரொம்ப நன்றிடா ராஜு".

"டேய். நன்றிகின்றி எல்லாம் சொன்ன உதைபடுவே! "

"நான் அப்புறம் பேசறேன் மாப்பிள்ளை" என்று சொல்லி போனை வைத்தான்.

தெளிவு கிடைத்திருந்தது. விடை கிடைத்திருந்தது.

# 7

அடுத்த சில நாட்களில் அவளுக்கு விசா கிடைக்கவே மாலினி காலேனியல் வில்லேஜ் என்ற இடத்தில் வீடு பார்த்திருந்தாள். வீட்டில் தன்னுடைய பொருட்களையெல்லாம் மூட்டை கட்டிவிட்டு ராஜிடம் "நான் கிளம்பறேன்" என்றாள்.

அவன் போ என்றும் சொல்லவில்லை. இரு என்றும் சொல்லவில்லை. அவளை பொறுமையாக நின்று நோக்கினான்.

அவள் அவனருகில் வந்து அவனை எட்டி பிடித்து அவன் கன்னத்தில் ஒரு முத்தமிட்டாள். அவள் கண் கலங்கியிருந்தது.

"ஹேய் நீ இப்பவே எனக்கு விடை கொடுக்க வேண்டாம். நான் உங்க வீட்டுக்கு வந்து எல்லாம் அடுக்கி வைக்க உதவி செய்யறேன்" என்று சொல்லிக் கொண்டே எல்லாவற்றையும் எடுத்து வண்டியில் ஏற்றினான்.

15 நிமிட பயணத்தில் போருக்கு பின் வரும் அமைதி. வீடு சென்று அடைந்தபிறகு பம்பரமாய் சுழன்று வீட்டை தயார் செய்தாள் மாலினி. அவனும் முடிந்த அளவு உதவி செய்தான்.

அனைத்தையும் முடித்துவிட்டு அவள் தன் படுக்கையின் ஓரத்தில் வந்து அமர்ந்தாள். அது ஒரு ஸ்டுடியோ அப்பார்ட்மென்ட். படுக்கையறை ஹால் சமையல் அறை எல்லாம் ஒரே இடத்தில். அவன் எதிர் மூலையில் ஒரு நாற்காலியில் அமர்ந்தான்.

அவள் தன் கூந்தலை அவிழ்த்துவிட்டு பறக்கவிட்டிருந்தாள். அது அவளுடைய இடது முகத்தை மறைத்திருந்தது. சில நிமிடங்கள் யாரும் ஒன்றும் பேசவில்லை. அவன் அவளருகில் சென்று அமர்ந்தான். அவள் கூந்தலை விலக்கிவிட்டான். அவளுடைய முகவாயை தன் பக்கம் திருப்பினான். அவன் தன்னுடைய வலது கையால் அவள் பின் கழுத்தை பிடித்து அவளை அருகில் கொண்டு வந்து மெதுவாக கூறினான்.

"மாலினி நீ அழகான பெண்".
..
"மாலினி நீ அறிவுள்ள பெண்".
..
(சீக்கிரம் சொல்லுங்க என்று ஆவலாக அவனை நோக்கினாள்)
"உன்னை பார்த்துகிட்டே இருக்கலாம்".
..
"உன்னோடு பேசிகிட்டே இருக்கலாம்".
..
"ஒரு நாள் முழுவதும் உன்னோடு இருக்கனும்னு சொன்னா கூட அதை என் பாக்கியமா தான் நினைப்பேன்".

(நாள் முழுவதுமா? வாழ்நாள் முழுவதும் என்று சொல்லுங்கள்)

"ஆனா என்னால உன்னோட 22 மணி நேரம் தான் இருக்க முடியும்".

அவள் குழப்பமாக பார்த்தாள்.

"குறைந்த பட்சம் 2 மணி நேரமாவது என் மனைவியோட இருக்கனும் இல்லையா?" என்று சொல்லிவிட்டு சட்டென்று எழுந்து திரும்பினான். அவன் கண் கலங்குவதை அவளுக்கு காட்ட அவன் விரும்பவில்லை.

அவனுடைய வலது கையை பிடித்து சட்டென்று நிறுத்தினாள்.

"நீங்கள் யாரையாவது காதலிக்கிறீங்களா?"

"ஆமாம்" திரும்பாமலே விடை சொன்னான்.

"அவங்க உங்களை காதலிக்கிறாங்களா?"

"தெரியலை". கண்களில் நீர் வழிந்தது.

"அவங்க உங்களை காதலிக்கலைன்னு சொன்னா வரிசையில் நான் இரண்டாவது ஆளா நிற்கிறேனா?" ஏக்கத்துடன் கேட்டாள்.

அவன் திரும்பி அவளுடைய இரண்டு தோள்களையும் தன் இரண்டு கைகளால் பிடித்துக் கொண்டு - "நீ அழகான புத்திசாலியான தோழி மட்டும் எனக்கு. ஏன்னா இந்த வரிசையில் ஒரே ஒரு டோக்கன் தான். அதை அவளுக்கு எப்போதோ தந்துவிட்டேன். அந்த டோக்கனை அவள் பயன்படுத்தாவிட்டாலும் வேறு டோக்கன் இல்லை என்னிடம். புரிந்ததா?"

அவள் "ஒரு நிமிஷம்" என்று சொல்லி உள்ளே போனாள். சிவாலய விபூதியை எடுத்து அவன் நெற்றியில் இட்டு ஊதினாள். ஒரு ஐயர் பெண் நாமமே இட்டு வளர்ந்த அந்த ஐயங்காரின் நெற்றியில் விபூதியின் மூலம் தன் முடிவை தெரிவித்திருந்தாள்.

Raj, you are the best. I will treasure the time I spent with you till my death.

You are a wonderful person Malini. I had some memorable time with you. You deserve the best partner. Unfortunately it's not me. Bye

Bye

அவன் மெதுவாக நடந்து வெளியே சென்று தன் காரை துவக்கி நெடுஞ்சாலையில் நுழைந்தான். அவன் மனம் தெள்ளத்தெளிவான நீரோடையில் போல் இருந்தது.

குதிரை கூட்டதைவிட்டு அது மான் கூட்டத்தில வந்துடுத்து ராஜ்.

மான் கூட்டம் அவளை ஏத்துக்கலைன்னா ராஜ் அவ நடுத் தெருவில.

நீ மாலினி கிட்ட சிலியாவின் மாற்றை பார்த்தே. அப்படின்னா நீ சிலியாவைத்தான் இன்னும் தேடிக்கிட்டு இருக்கே.

என் நண்பன் ஒரு மாமேதை. இந்த நாட்டில் குடும்ப கவுன்சிலர் என்று போர்ட்டு போட்டுக் கொண்டு மக்களின் பிரச்சனையை கேட்கவே பல ஆயிரம் டாலர்கள் சம்பாதிக்கிறார்கள். அவர்களால் மக்களின் பிரச்சனை தீர்கிறதா என்று தெரியவில்லை.

Raju you are the best psychiatrist in the world என்று நண்பனை புகழ்நதான். சிலியாவின் ஃபயிலை டெலிட் செய்யவில்லை அவன். மாலினியின் ஃபயிலை காபி செய்யவேண்டிய அவசியம் இல்லாமல் பார்த்துக் கொண்டான்.

# 8

கிருஷ்ணனும் சுருதியும் அமர்ந்துக் கொண்டு இந்த விடுமுறைக்கு எங்கே போகலாம் என்று திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்கள்.

"சைப்ரஸ்" என்றான் கிருஷ்ணன். "அங்கே விநாயகம் இருக்கான் போய் பார்க்கலாம். அவன் எல்லா இடத்தையும் சுத்தி காட்டுவான்".

"வேண்டாம்".

"துபாய்? கோவிந்தராஜன் இருக்கான். அவன்கிட்ட இன்னோரு வீடு காலியா இருக்கு ஓட்டல் செலவு கூட இல்லை. என்ன சொல்றே?"

"வேண்டாம்".

"பஹ்ரைன்? பாலாவோட தம்பி பாஸ்கர் இப்பதான் வேலை கெடைச்சி போயிருக்கான். சொன்னா விசா ஏற்பாடு பண்ணித்தருவான்?"

"வேண்டாம்".

"வேறே எங்கே சுருதி நீயே சொல்லு. சுவிட்சர்லாந்தா?"

"நியூ ஜெர்ஸி" என்றாள்.

"எதுக்கு?"

"உங்கள் நண்பர் ராஜகோபாலையும் சிலியாவையும் பார்த்துவரலாம். வின்டர் அங்கே. பனி அழகாக இருக்கும். அப்படியே…." என்று வேண்டும் என்றே இழுத்தாள்.

"அப்படியே…. "அவன் ஆர்வத்துடன் பார்த்தான்.

"அப்படியே உங்க குழந்தையையும் முதல் பொண்டாட்டியையும் பார்த்து வரலாம்".

"ஏய் நீ தான் என் முதல் பெண்டாட்டி என்று சொல்லி அவளை இறுக அணைத்தான். ஐ லவ் யூ சுருதி. யூ ஆர் த பெஸ்ட்".

திருமணம் ஆகி இன்று வரை ஒரு நாள் கூட ரீட்டாவைப் பற்றியோ அவன் செய்த தப்பைப் பற்றியோ அவள் பேசியதே இல்லை. இது அவள் மேல் அவன் கொண்ட காதலையும் மதிப்பையும் கூட்டியிருந்தது. ரீட்டா மாதாமாதம் எழுதும் கடிதங்கள் சுருதி பெயருக்கே வந்தன. அவை, "நீ நல்லா இருக்கியா கிருஷ் நல்லா இருக்கானா. என் குழந்தையோட போட்டோ இணைச்சிருக்கேன்" என்று சாதாரணமான கடிதங்கள் தான்.

என்ன தான் தவறான உறவாக இருந்தாலும் ஒரு ஆணுக்கு தன்னுடைய மகன் மகள் என்ற ஒரு பாசம் இருக்கத்தான் செய்யும் அல்லவா? எங்கோ வளர்ந்து கொண்டிருந்த தன் முதல் வாரிசை பார்க்க அவனுக்கும் ஆவலாக இருந்தது. அதை எப்படி சுருதியிடம் சொல்வது என்று ஏங்கித் தவித்தான். சுருதி அவனுடைய மனநிலை புரிந்தவளாய் இந்த விடுமுறைக்கு நியூ ஜெர்ஸிதான் என்ற முடிவை எடுத்தாள்.

எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு ரீட்டாவிற்கும் தகவல் கூறினார்கள். அவள் மகிழ்ச்சியில் திக்குமுக்காடிப் போனாள். என் வீட்டில் தான் வந்து இறங்க வேண்டும், தங்க வேண்டும் என்று அடம் பிடித்தாள். ரூட் 1ல் ஒரு 10 மைல் ஓட்டினால் ரீகல் சினிமா காம்ப்லெக்ஸ் வரும். அதன் பின்னால் ஆல்பர்ரி வே. அதில் ஒரு டவுன் ஹவுசில் தனியாக இருந்தாள் ரீட்டா.

அழகான வீடு. முன்னாலும் பின்னாலும் பச்சை பசேல் புல்வெளி. மரங்கள். கீழே சமையல் அறை, ஒரு பெரிய ஹால். மேலே மூன்று படுக்கை அறைகள். மிக அழகாக அலங்கரித்திருந்தாள். ஒரு பெரிய தஞ்சாவூர் தட்டு, ஒரு தலையாட்டி பொம்மை அவளுடைய வீட்டில் சற்றே இந்திய மணத்தை வீசித் தெளித்தது. சமையல் அறையில் குளிர்சாதனப் பெட்டியின் மேல் மூன்று படங்கள். ஒன்று கிருஷ் இன்னொன்றில் அவள் குழந்தையுடன். மற்றொன்றில் அவள் குழந்தை மட்டும்.

சுருதியை ஓடிச் சென்று கட்டிக் கொண்டாள்.

"Shruthi darling. You are the best in the world" என்றாள் இன்பத்துடன்.

"I know" என்றாள் சுருதி சிரித்துக் கொண்டே.

ரீட்டா குழந்தையையும் அவள் எடுத்த பல புகைப்படங்களையும் காட்டிக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தில் ராஜ் தன் வேலையை முடித்துக் கொண்டு ரீட்டாவின் வீட்டிற்கு கிருஷ்ணன் சுருதியை பார்க்க வந்தான்.

"ராஜ், எனக்கு இந்த இடம் சுத்தி காண்பிங்க" என்று ராஜை அழைத்துக் கொண்டு வெளியே சென்றாள் சுருதி. கிருஷ்ணனுக்கும் ரீட்டாவுக்கும் தனிமை தேவைப் படலாம் இல்லையா?

"சுருதி, நீ கெட்டிக்கார பெண். கிருஷ்ணன் உன் கிட்டே அவன் செஞ்ச தப்பை சொன்னதும் நீ கல்யாணத்தை நிறுத்தியிருந்தா உன் எதிர்காலமே பாதிக்கப்பட்டிருக்கும். உங்க அப்பா அம்மா மனசு நொடிஞ்சி போயிருப்பாங்க. கிருஷ்ணனோடு அப்பா அம்மா அவனை கொன்னே போட்டிருப்பாங்க. அவனோடு வாழ்க்கையும் வீணா போயிருக்கும். உன்னோட ஒரு முடிவாலே இவங்க எல்லோருடைய வாழ்கையையும் சொர்க்கமாக்கிட்டே" என்று தன் நண்பனின் மனைவியை பாராட்டினான் மனமார.

"இல்லை ராஜகோபால். ஒரு ஆண் வீட்டை விட்டு வெளியே போனதும்

அலைந்து திரிகிறான். அவன் பல பெண்களை சந்திக்கிறான். பல பேரோடு உறவு கொள்கிறான். ஆனால் அவன் இரவில் வீடு திரும்பிறானா? இது தான் கேள்வி. கோவலன் மாதிரி மாதவியின் வீட்டிலே இருந்துவிட்டால் தான் பிரச்சனை. எப்போ வந்து கிருஷ்ணன் என்கிட்டே இந்த விஷயத்தை சொன்னானோ அப்பவே அவனுக்கு என் மேலே ஏதோ பிடிப்பு இருக்குன்னு தெரிஞ்சிகிட்டேன். ரீட்டாவுடன் நடந்தது ஒரு விபத்து. அது நிரந்திரமில்லாதது. நான் தான் நிரந்தரம்".

"அதுமட்டுமல்ல. நான் ஒரு வேளை அவனை தடுத்து ஆர்ப்பாட்டம் செய்திருந்தால் இந்த நிரந்திரமில்லாத உறவை நிரந்திரம் ஆக்க அவன் முயற்சி செய்திருப்பான். அதனால் எல்லோருக்குமே தொல்லைதான்".

"இப்போது கூட நான் உங்களை வெளியே அழைச்சிகிட்டு வந்ததே அவங்க இரண்டு பேரும் தனியாக இருக்கத்தான். அவர்கள் உடல் உறவு கொண்டாலும் எனக்கு கவலையில்லை. வருடம் ஒரு முறை அவர்கள் சந்திப்பதையோ சேர்நதிருப்பதைப் பற்றியோ எனக்கு கவலையில்லை. வீட்டைவிட்டு கிருஷ்ணனாய் போய் ராமனாய் திரும்பி வந்தால் போதும்".

அவளை வியப்புடன் பார்த்தான் ராஜ்.

- - -

அங்கோ கிருஷ்ணன் தன் குழந்தையை கொஞ்சிக் கொண்டிருந்தான்.

"ரீட்டா, நீ கல்யாணம் பண்ணிக்கோ? நான் வேண்டுமானால் குழந்தையை எடுத்து போய் வளர்க்கிறேன். எனக்கு யாரைப் பத்தியும் கவலை இல்லை".

"வேண்டாம் கிருஷ். எனக்கு என் குழந்தை போதும்".

"அப்ப உன் நினைப்பு முழுக்க குழந்தைக்கு மட்டும் தானா? எனக்கு இல்லையா?"

"இருக்கு கிருஷ். நீ 2 சதவிகிதம். குழந்தைக்கு 98 சதவிகிதம்".

"2 சதவீதம் தானா?"

"ஆம். நீ கொடுத்த அந்த ஒரு உயிர்துளியில் நான் இந்த அன்புக் கடலை உருவாக்கியிருக்கிறேன்".

"நீ இங்க மாசமா இருக்கும் போது எனக்கு உன் நினைப்பு தான் ரீட்டா. நீ இங்கே எவ்வளவு கஷ்டப்படறியோன்னு நெனைச்சி நான் துடிதுடிச்சி போயிட்டேன். எனக்கு நீதான் முக்கியம். நீ தான் 98 சதவீதம் எனக்கு. குழந்தை 2 சதவீதம் தான்".

"ஹா ஹா எனக்கு 98 சதவிகிதம் கொடுத்திட்டா சுருதிக்கு ஒன்னும் இல்லையா?"

"வேண்டாம் ரீட்டா. இந்த கேள்வி மட்டும் என்கிட்டே கேட்காதே. "என்னால் பதில் சொல்ல முடியாது" என்றான் கிருஷ்ணன்.

- - -

"சுருதி, நீ அவனுக்கு என்ன சுதந்திரம் தந்திருக்கேன்றதை கேட்டா எனக்கு சந்தோஷமா இருக்கு. ஆனால் நான் என் நண்பனைப் பத்தி சொல்றதை கேளு. அவன் ரீட்டாவை தொடக்கூட மாட்டான்".

சுருதி மெல்லச் சிரித்தாள்.

"வா இப்பவே போய் பார்ப்போம்".

"வேண்டாம் ராஜகோபால்".

"வா நீ" என்று கட்டாயமாக அழைத்துச் சென்றான்.

கதவு திறந்தே இருந்தது. 4 அடி தள்ளி இருவரும் அமர்ந்திருந்தனர்.

கிருஷணனின் கையில் குழந்தை. எதிரே ரீட்டா. ஏதோ ஆங்கிலத்தில் பேசிக் கொண்டிருந்தாள். செந்தமிழும் நாப்பழக்கம். என்னதான் தமிழ் படித்தாலும் பேச யாரும் இல்லையென்றால் எப்படி வரும் பழக்கம்.

ராஜகோபாலுக்கு ஒரு வெற்றி. சுருதிக்கு கிருஷ்ணன் மேல் இன்னும் மதிப்பும் அன்பும் கூடியது. ராஜ் சுருதியைப் பார்த்து "பார்த்தாயா என் நண்பனை" என்பது போல ஒரு ஜாடை செய்தான். அவள் கண்களாலேயே நன்றி கூறினாள்.

"ஹேய் சுருதி, இந்த குழந்தை உன்னை மாதிரியே இருக்கு" என்றான் கிருஷ்ணன் நகைச்சுவையாக.

"உங்களுக்கும் ரீட்டாவுக்கும் பிறந்த குழந்தை என்னை மாதிரி எப்படி இருக்கும்? கிண்டலா" என்று கேட்டாள் பொய் கோபத்துடன்.

"இல்லை சுருதி. நான் ரீட்டாவோடு சேரும்போதே நீ எனக்குள்ளே தான் இருந்தே" என்றான் உணர்ச்சிவசப்பட்டு.

அவனை அணைத்துக் கொண்டாள் சுருதி. ரீட்டா ஆனந்தம் பொங்க கண்ணீர் மல்க அவர்களை பார்த்தாள்.

அரை மணி நேரம் கழித்து சிலியா வந்தாள். சுருதியை கட்டி தழுவிவிட்டு ரீட்டாவிற்கு ஒரு ஹாய் சொல்லிவிட்டு கிருஷ்ணின் கை குலக்கினாள்.

ராஜைப் பார்த்து, "எப்படி இருக்கே" என்று கேட்டாள்.

"உன் முன்னாடி எப்படி இருக்கேனா அப்படிதான் இருக்கேன்" என்றான் விரக்த்தியாக.

ரீட்டா அனைவருக்காகவும் சமைக்க சமையல் அறையில் ஏதோ போட்டு உருட்டிக் கொண்டிருந்தாள்.

சில நிமிடங்களில், "ராஜ், என்னுடைய சிங்க் அடைத்துவிட்டது. தண்ணீர் நிரம்பி வழிகிறது கொஞ்சம் சரி செய்ய முடியுமா?" ஆண்கள் இல்லாமல் பெண்கள்

தனியே வாழமுடியும். பலரும் அப்படித்தான் வாழ்கிறார்கள். ஆனால் வீட்டில் ஒரு ஆண் இருந்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்பது இந்த மாதிரி சில சமயங்களில் தான் பெண்களுக்கு புரிகிறது. அமெரிக்காவில் இது போன்ற சிறிய வேலைகள் நாமாகவே செய்துக் கொள்ளவேண்டும். இல்லையென்றால் 100-200 டாலர்கள் தயாராக வைத்துக் கொள்ளவேண்டும்.

"ஓ. நான் பார்க்கறேன்" என்று சொல்லி விட்டு ஒரு ஸ்க்ரூ டிரைவரை கையில் எடுத்துக் கொண்டு சிங்க்கை நோட்டம் விட்டான். "அந்த கீழ் தட்டை திறந்தால் தான் என்ன அடைப்பு" என்று பார்க்க முடியும் என்று சொல்லிக் கொண்டே திருப்பளியை வைத்து அதை நெம்பினான்.

அவன் சற்றும் எதிர்பாரதா வண்ணம் அந்த ஸ்டீல் தட்டு சட்டென்று எழும்பி அதன் கூரிய விளிம்பு அவன் கட்டை விரலை அறுத்தது.

"ஆ" என்று கத்தினான். சிலியா ஓடி வந்தாள். அவன் விரல் துண்டாகியிருந்தது. இன்னும் நன்றாக கிழித்திருந்தால் விரல் தனியே கீழு விழுந்திருக்கும்.

"என்னாச்ச ராஜ்?" என்றவள் ரத்தச் சிதறல்களைப் பார்த்து பதறினாள். சட்டென்று தன் கைகுட்டைய எடுத்து அவன் விரல்களில் கட்டிவிட்டு அவனை தரதரவென்று இழுத்துக் கொண்டு காரை நோக்கிச் சென்றாள்.

கிருஷ்ணன் ஓடி வந்து, "நான் வரட்டுமா" என்று கேட்க, "வேண்டாம்" என்று கத்திக் கொண்டே வண்டியை ராபின்ஸன் மருத்துவமனைக்கு ஓட்டினாள்.

அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அவனை அழைத்துச் சென்றாள்.

மருத்துவர் அவனைப்பார்த்து, "இது மட்டும் பின்புறமாக கிழித்திருந்தது என்றால் உன் விரல் உனக்கு இல்லை" என்றார். பிறகு ரத்தத்தை துடைத்து மருந்திட்டு 10 தையல் போட்டு அந்த விரலை உடலுடன் சேர்த்தார்.

"என் கையை சரி செய்ததற்கு நன்றி, டாக்டர். இது ஒரு அழகான தேவதையின் கைகளை பிடிக்க வேண்டிய பெரும் பணிக்காக காத்திருக்கிறது" என்று அவளை

பார்த்துக் கொண்டே மருத்துவரிடம் கூறினான்.

அவள் அவனை உற்றுப் பார்த்தாள். அதில் எல்லையில்லாத காதலைப் பார்த்தாள். ஏக்கத்தை பார்த்தாள். பொறுமையை பார்த்தாள்.

அவனை காரில் அமர்த்தி வண்டியை துவக்கினாள்.

"உனக்கு சிங்க் சரி பண்ணத் தெரியுமா? தெரியாத வேலையெல்லாம் ஏன் செய்யறே" என்று கத்தினாள்.

"சிலியா, தெரியாத பல வேலை செஞ்சிருக்கேன் நான். கம்ப்யூட்டர் கற்றுக் கொண்டேன். அமெரிக்கா வந்தேன். புகை பிடிச்சேன் சாராயம் குடிச்சேன். டிஸ்கோ போனேன். ஒரு அழகான தேவதையின் மேல் காதல் கொண்டேன். அவளை நினைத்து பைத்தியமானேன். அவளை பிரிந்து நடை பிணமானேன். அவளுக்காக அழுதேன். புலம்பினேன். இது எல்லாமே முதல் முறை செஞ்ச காரியங்கள் தானே?"

அவள் மௌனமானாள்.

"நாம ஒரு காபி குடிக்கலாமா?"

"கிருஷ்ணன் சுருதி அங்கே காத்திருக்காங்க?" என்ற அவள் சொன்னாலும் அவனுடன் இன்னும் சில நேரம் தனிமையில் இருப்பதையே விரும்பினாள்.

"ரீட்டா பார்த்துப்பா. நீ வண்டியை ஓட்டு".

ப்ரன்ஸ்விக் ஸ்கொயர் மாலில் பார்ன்ஸ் அன்ட் நோபில் எதிரே வண்டியை அணைத்தாள். ஒவ்வொரு பார்ன்ஸ் அன்ட் நோபில் புத்தக கடையிலும் ஒரு ஸ்டார் பக்ஸ் காபி கடை உண்டு.

"ஒன் காஃபே லாட்டே அன்ட் ஒன் எஸ்பிரஸ்ஸோ" என்று விட்டு அவன் அருகில் வந்த அமர்ந்தாள். காபி அமெரிக்காவில் எப்போதுமே பெரிய கோப்பைகளில்

தான். குடிக்கவே 20 நிமிடம் ஆகும். அன்று 30 நிமிடம் ஆனது.

இரு ஆன்மாக்கள் பேசிக் கொள்ளாமல் அருகாமையில் இருப்பதே சொர்க்கம் என்று நினைத்திருந்தன.

காபி குடித்தப் பிறகு, "நான் ஒரு புத்தகம் வாங்கவேண்டும்" என்றான்.

"சரி" என்று சொல்லி அவளும் கூட வந்தாள். கட்டுப்பட்ட கையை எங்கேயாவது இடித்துவிடப் போகிறான் என்ற கவலை அவளுக்கு. இன்னும் 15 நிமிடங்களை கழித்தான்.

பிறகு ஒரு பெரிய புத்தகத்தை கையில் எடுத்தான். அவளிடம் காட்டினான்.

'குழந்தை வளர்க்க 1000 யோசனைகள்' என்று கொட்டை எழுத்துக்களில் எழுதி ஒரு அழகான பிஞ்சின் புகைப்படம் போட்டிருந்தது.

"யாருக்கு இந்த புக் சுருதிக்கா? அவ முழுகாம இருக்காளா?"

"இல்லை சுருதிக்கு இல்லை".

"பின்னே ரீட்டாவிற்கா?"

"இல்லை".

"பின்னே யாருக்கு?"

"உனக்கு".

"என்ன? எனக்கு எதுக்கு?"

"நமக்கு அடுத்த மாசம் கல்யாணம் ஆயிட்டா அடுத்த வருஷம் உன் கையில் குழந்தையிருக்கும் இல்லையா?"

அவனை இறுக கட்டி உதட்டோடு உதடு முத்தமிட்டாள். பல நிமிடங்கள் அவனை அணைத்து முத்தமிட்டபடியே இருந்தாள்.

"இத்தனை நாள் என்னை விட்டுட்டு எங்கே போயிட்டே ராஜ்?"

"நான் எங்கேயும் போகலை சிந்து. உன்னோடு தான் இருந்தேன். உன்னோடு தான் வாழ்ந்தேன். நீதான் என்னைவிட்டுட்டு போயிட்டே".

"இனிமே போகமாட்டேன், ராஜ். என் உயிருள்ளவரை போகமாட்டேன்" என்று கண்களில் நீர் மல்க சொல்லி அவனை அணைத்துக் கொண்டாள்.

இருவரும் புத்தகத்திற்கு பணம் கொடுத்துவிட்டு வெளியே வந்தனர். அவள் தன் வலது கையால் அவன் இடது கையை பிடித்துக் கொண்டு அவன் தோள்களில் சாய்ந்தவாறே நடந்து வந்தாள்.

"சிந்து, உனக்கு இன்னொரு விஷயம் சொல்றேன். என் அம்மன் கிட்டே வரம் கேட்கறதுக்கு நான் விழுப்புரம் போகவேண்டிய அவசியமில்லை. நான் எங்கிருக்கிறேனோ அங்கே வந்து என் கோரிக்கையை கேட்டு நிறைவேற்றி வைப்பாள் அவள்".

"ராஜ், இன்னிக்கு நானும் இங்கே வரதுக்கு முன்னே அவள் கிட்டே கெஞ்சி கேட்டுட்டுதான் வந்தேன்".

மேற்கு கறுத்திருந்தது. ஆனால் இந்தப் புது கிழக்கின் சங்கமத்தில் மேற்கில் ஒரு புதிய உதயம் ஆரம்பமாகியிருந்தது.

**முற்றும்**



**மோகன் கிருட்டிணமூர்த்தியின் பிற படைப்புகள்:**

1. மேற்கே செல்லும் விமானம் – 4 பாகங்கள்
2. கடைசி பேட்டி
3. மெல்லக் கொல்வேன்
4. என் கை பிடித்தவன்
5. போதாதெனும் மனம்
6. கறுப்பு வரலாறு
7. ரிதுவேந்தர்
8. கணினிக் காதல்
9. நேற்றைய கல்லறை
10. இன்னும் பெயர் வைக்கவில்லை
11. காதல் இல்லையேல் காதல்
12. Westbound Flight (மேற்கே செல்லும் விமானம் மொழி பெயர்ப்பு)
13. Influences of Unknown Factors on Mankind

இவற்றை நீங்கள் கீழ்கண்ட தளங்களில் காணலாம்

1. Google Books
2. Apple iBooks
3. Amazon Kindle

உங்கள் கருத்துக்களை leomohan@yahoo.com எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள். நன்றி.

Also subscribe to www.youtube.com/leomohan for Video Series in Tamil. Stock Market Training, Corporate World Challenges and 5-Minute Videos are the topics currently available. Visit www.soundcloud.com/leomohan or www.shoutengine.com for Tamil Audio podcasts.